செ.கு.எண் :- 124

நாள் :- 02.04.12

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 2.4.2012

கடலூர் மாவட்டம், சேத்தியாதோப்பு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு.S. ராமதாஸ் அவர்கள் 28.3.2012 அன்று மாரடைப்பால் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், கருவேப்பிலங்குறிச்சி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. R.ஜெயராமன் அவர்கள் 10.3.2012 அன்று வாகன விபத்து ஏற்பட்டு, பலத்த காயமடைந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு உட்கோட்டம், குமாரபாளையம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி புரிந்து வந்த திரு. N.கணேசன் அவர்கள் 4.3.2012 அன்று பணியில் இருக்கும் போது மாரடைப்பு ஏற்பட்டு மருத்துவமனைக்கு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், புளியங்குடி உட்கோட்டம், சொக்கம்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி புரிந்து வந்த திரு. த. கஜேந்திரன் அவர்கள் 2.3.2012 அன்று வாகன விபத்து ஏற்பட்டு, பலத்த காயமடைந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாநகர் ‘Q’ பிரிவு, புலனாய்வுத்துறையில், சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்த திரு. V. தினகரன் அவர்கள் 16.3.2012 அன்று புற்று நோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், சிறுகனூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. R. மணிமாறன் அவர்கள் 25.2.2012 அன்று ரோந்து பணியின் போது விபத்து ஏற்பட்டு, பலத்த காயமடைந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை, அம்பத்தூர் எஸ்டேட் காவல் நிலையத்தில் தலைமை காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் 14.3.2012 அன்று உடல் நலம் பாதிக்கப்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை, சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு. S. ராமதாஸ், திரு.R.ஜெயராமன், திரு.N.கணேசன், திரு.T.கஜேந்திரன், திரு. V. தினகரன் மற்றும் தலைமைக் காவலர்கள் திரு. R. மணிமாறன் மற்றும் திரு.E.சுப்பிரமணியபிள்ளைஆகியோர்களின்அகாலமரணத்தால்சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்துயரச் சம்பவங்களில் காலமான திரு. ராமதாஸ், திரு. ஜெயராமன், திரு. கணேசன், திரு. கஜேந்திரன், திரு. தினகரன், திரு. மணிமாறன் மற்றும் திரு.சுப்பிரமணியபிள்ளை ஆகியோரின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா இரண்டு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9